முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நந்தனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.09.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **மாதவசியே அரங்கா வாழ்க**
**மாதருமம் புரியும் ஞானியே வாழ்க**
**பூதலத்தில் தீட்சை விழா நடத்தி**
**பிரம்ம சக்தி சூட்சும சக்திகளை**

2. சக்திகளை சாமானியருக்கும் அருளி
சற்குருவாய் காத்து வருகின்ற
சக்திமிகு அரங்கா வாழ்கவென
சாற்றியே ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
**நிலமதனில் நாத திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**காலமதில் நந்தனார் யானும்**
கண்டுரைப்பேன் உலகோர் நலம் பெற

4. நலம் தரும் அரங்கன் மலரடி
ஞானபலம் தரும் ஏணிப்படியாகும்
வலம் வர உலக மக்களே
வந்த பிறவிப் பயன் அடையும்

5. அடையும் தெளிவு திடமுற்று
ஆறுமுகனாரை காணும் வாய்ப்பு
தடையற ஞானியர் வழி பெறுவர்
தவபலத்தின் சக்தியாக தரும்

6. தருகின்ற தீட்சை விழா நாளில்
தரணியோர் பணிந்து வணங்கி
திருவடி தீட்சை அடைந்துவிட
தீட்டு எனும் மனக்கவலை விலகும்

7. விலகும் அரங்கன் தீட்சையால்
வினை ஒழியும் அசுரகுணமுடன்
கலகம் மும்மலக் குற்றமும்
கண்டமிடர்களும் விலக நேரும்

8. நேருமைபட நடக்கும் மக்கள்
நெருங்கி அரங்கன் நடத்தும்
தரும வேலிக்குள் வருகவே
தயவு எனும் பலம் கூட்டுகின்ற

9. கூட்டுகின்ற சடாட்சர தீட்சை
கூறிடுவேன் இன்று ஏற்றிட
வாட்டம் கட்டம் ருணமிடர்கள்
வந்தது போல உடனே விலகி

10. விலகி மனபலம் தனவளம்
வேலவன் துணைபலம் கூடிடும்
ஞாலமதில் அரங்கமகானின்
ஞானதீட்சை மக்கள் சக்தியை மாற்றி

11. மாற்றியே ஞானிகள் ஆளும்
மரணம் வெல்லும் ஞானயுகமாக்கும்
ஆற்றல்கூட இன்றே அரங்கன்
அருள் தீட்சை அடைய வாரீர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் நந்தனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எண்ணிலா தவங்கள் செய்து வெற்றி கண்டிட்ட மகா தவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க, எல்லையில்லாது மாதருமம் புரியும் மகா ஞானியே வாழ்க வாழ்க, இவ்வுலகினில் தாம், தவம் துவங்கிய நாளதனை மக்களும் அறிந்து கடைத்தேறிட உலக நலனிற்காக தீட்சை விழாவாக நடத்தி பிரம்மசக்தி முதல் உலகின் மகா சக்திகளை சூட்சும சக்திகளை உலகினில் உள்ள சாதாரண மக்களும் பெற்றிடவே அருள் செய்து உலகிற்கு சற்குருவாய் உலகை காத்து வருகின்ற சக்திமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க என வாழ்த்தியே அரங்கா உமது புகழை உலகறிய உரைத்துமே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நந்தனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நந்தனார்.

எல்லா நலங்களையும் தந்தருளும் ஆறுமுக அரங்கன் மலரடியே ஞானபலம் தரவல்ல ஏணிப்படியாகும். ஆதலின் உலகோரே அரங்கனின் அற்புத மலரடிகளை பணிந்து வலம்வர நீங்கள் இந்த உலகினில் பிறந்திட்ட பிறவியின் பயனை அடைவீர்கள். நீங்கள் அறிவு தெளிவும் திடசிந்தையும் பெற்று ஜோதி சொரூபியான முருகப்பெருமானை காணும் வாய்ப்பையும் அரங்கமகா தேசிகனார் மூலமாக தடையின்றி பெறலாம்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தமது தவபலத்தின் சக்தியாக தீட்சை வடிவில் தருகின்ற தீட்சை விழா நாளில் உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளைப் பணிந்து பயபக்தியுடன் நடந்து திருவடி தீட்சைகளை அடைந்துவிட்டால் தீட்டு எனும் மனக்கவலையாகிய இருளானது அவரவரை விட்டுவிலகிடும். ஆறுமுக அரங்கனின் தீட்சையை பெற்றிட்டால் தீட்சை பெற்றவர்களின் வினைகள் எல்லாம் ஒழிந்துவிடும். அவரவரைப் பற்றிய அசுரகுணமும் விலகுவதோடு கலகங்களும் மும்மலக் குற்றங்களும் இடைக்கண்டங்களும், கண்டங்களினால் வருகின்ற துன்பங்களும் விலகிடுமப்பா.

நீதிநெறியுடன் நேர்மையுடன் வாழ்கின்ற மக்களெல்லாம் தூயநெறி போதிக்கும் சற்குரு ஆறுமுக அரங்கனை குருவாக ஏற்றுக் கொண்டு அரங்கன் நடத்தும் தருமத்தின் வேலிக்குள் வந்து அரங்கனின் தானதருமச் செயல்களுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்து அவரவரும் தயவு உணர்வை வளர்த்து கொள்ள வேண்டும்.

தயவு உணர்வை அதிகப்படுத்தும் வல்லமைமிக்க சடாட்சர தீட்சைதனை இன்றைய தினமதனிலே ஏற்றிட அவரவரைப் பற்றிய வாட்டங்கள் விலகும், கஷ்டங்கள் நீங்கும், கடன்சுமைகள் நீங்கும், அவை எப்படி வந்ததோ, வந்த சுவடு தெரியாமல் போய்விடும்.

அவர்களுக்கு அரங்கன் அருள் கூடி மனோபலம் பெருகி கவனம் பெருகுவதோடு முருகப்பெருமானின் துணையும் பெற்றிடுவார்கள்.

உலகினில் மகா ஞானி ஆறுமுக அரங்கன் அளிக்கும் தீட்சைகளான ஞானதீட்சை மக்களின் சக்தியை மாற்றி ஞானிகள் ஆளும் மரணம் வெல்லும் ஞானயுகமாக ஆக்கிடும்.

ஆதலின் மக்களே உங்களின் ஆற்றல் கூடிட உடன் விரைந்து வாருங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு. ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கனிடத்து தீட்சை பெற்று கடைத்தேறிட வாரீர் வாரீர் என உலகோர்க்கு அழைப்பு விடுக்கின்றார் மகான் நந்தனார்.

–சுபம்–